# DEPOSITION OF WITNESSES
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI

C.C. No: 28/2019

**Deposition of Witnesses for PW1**

| Name | : | திரு.ஞானசேகர் | Caste: |
|---|---|---|---|
| Father's Name | : | | Calling: |
| Village | : | | Religion: |
| Taluk | : | | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **24.01.2025**

எதிரிகள் ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞரும் ஆஜர்.

## முதல் விசாரணை

நான் தற்போது ராமநாதரபுரம் மாவட்டம் திருப்புலானி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.07.2016ம் தேதி தேவிபட்டிணம் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வந்தபோது நான், மு.நி.கா.மீனாட்சி சுந்தரம், சார்பு ஆய்வாளருடன் பனைகுளம் ஏரியாவில் சட்ட ஒழுங்கு சம்பந்தமாக ரோந்து சென்றபோது பனைகுளம் பேருந்து நிறுத்தம் அருகே சென்றபோது அங்கே நின்றுக்கொண்டிருந்த நபர்கள் எங்களை பார்த்ததும் ஓடியவர்களை பிடித்து விசாரித்தபோது நாகூர் கனி, ஆட்டோ ஓட்டுநர் அன்வர் என்று சொன்னார்கள். நாகூர் கனி கையில் வைத்திருந்த வெள்ளை நிற வட்டம் போட்ட பாலிதீன் பையில் நியூஸ் பேப்பர் தாள் சுற்றப்பட்ட பொட்டலம் இருந்தது. அதனை பிரித்து பார்த்தபோது கஞ்சா இருந்தது. சார்பு ஆய்வாளர் தராசு கொண்டு எடை போட்டு பார்த்தபோது 1.200 கிராம் இருந்தது. அதில் தலா 100 கிராம் பரிசோதனைக்காக மாதிரிகள் சார்பு ஆய்வாளர் எடுத்தார். சார்பு ஆய்வாளர் கஞ்சாவினை அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றி, அதில் சாட்சிகளாக நானும், மீனாட்சி சுந்தரமும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த அத்தாட்சி அ.த.சா.ஆ.1. கைப்பற்றப்பட்ட சொத்துகளுடன் நிலையம் வந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளா என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

நாங்கள் ரைடுக்கு சென்றபோது விஏஓ, தலையாரி, தனி நபர் சாட்சிகளை அழைத்து செல்லவில்லை என்றால் சரிதான். பனைகுளம் பஸ் ஸ்டாப் என்பது 2 பஸ் ஸ்டாப் என்றால் சரிதான். பஸ் ஸ்டாப்பிற்கும் எதிரியை பிடித்தற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் அது பற்றி ஞாபகம் இல்லை. அத்தாட்சியை யார் எழுதினார்கள் என்றால் காவல் நிலையத்தில் உள்ள பாண்டி என்ற ரைட்டர் எழுதினார். அத்தாட்சியில் எதிரியிடம் கையொப்பம் வாங்கினாரா என்றால் அது பற்றி நினைவு இல்லை. அத்தாட்சியில் ஞுஉமு சீல் எதுவும் வைத்தார்களா என்றால் வைத்தார்கள். நியூஸ் பேப்பர் என்றால் தமிழ் நியூஸ் பேப்பர். அந்த பேப்பரை

கைப்பற்றினார்களா என்றால் ஞாபகம் இல்லை. பனைகுளம் பஸ் ஸ்டாப் அருகில் வீடுகள், கடைகள் உள்ளதா என்றால் தூரத்தில் உள்ளது. நான் முதல்விசாரணையில் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், எதிரிகளிடமிருந்து எந்த கஞ்சா பொருளும் கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட அ.த.சா.ஆ.I-ல் கையெழுத்து செய்துவிட்டு தற்சமயம் உண்மையை மறைத்துபொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court
read over to the witnesses and
admitted by him / her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.